


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், சமூகபாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தின் மூலம், விபத்து மரணம் மற்றும் இயற்கை மரணமடைந்த 5 நபர்களின் குடும்பத்தினருக்கு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இன்று (24.10.2016) வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ.இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 751/2016 நாள்: 24.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், 5 நபர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணத்தொகைக்கான காசோலைகளை இன்று (24.10.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (24.10.2016) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் சமூகபாதுகாப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தின் மூலம், விபத்தில் மரணமடைந்த மணலிக்கரையை சார்ந்த திரு. சுந்தர்சிங் என்பவரின் மனைவி சுபலா என்பவரிடம் விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக ரூ.1,02,000/-க்கான காசோலையினையும், இயற்கை மரணமடைந்த பைங்குளத்தை சார்ந்த திவாகரன் என்பவரின் மனைவி கமலாபாய், திருஞானபுரத்தை சார்ந்த தங்கசுவாமி என்பவரின் மனைவி சாந்தகுமாரி, குளச்சலை சார்ந்த குமாரதாஸ் என்பவரின் மனைவி சுமங்கலா, பாலவிளை சார்ந்த திருமதி. சிந்து என்பவரின் கணவர் திரு. நடராஜன் ஆகிய நான்கு நபர்களின் குடும்பத்தினருக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக தலா ரூ. 17 ஆயிரத்திற்கான காசோலைகள் என மொத்தம் ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு ரூ. ஒரு இலட்சத்திற்கான 70 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.10.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சோ. இளங்கோ, தொழிலாளர் நல அலுவலர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு. சு. சுடலைராஜ், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.